"தமிழ் எங்கள் உயிருக்கு நேர்"

# தமிழ்க் கல்விச்சேவை சுவிற்சர்லாந்து

Tamil Education Service Switzerland

# பொதுத்தேர்வு 2020

## தமிழ்மொழி ஆண்டு 6

**நேரம்: 120 நிமிடம்** **சுட்டெண்:** ____________

**வினாத்தாளில் விடை எழுதுக.**

## பகுதி - 1

**1. பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

1. தமிழிலுள்ள மொத்த எழுத்துகளின் எண்ணிக்கை
(இருநூற்றுப்பதினேழு, இருநூற்றுநாற்பத்தேழு, இருநூற்றுப்பதினாறு)

2. ஈழத்தில் ஏழு வெந்நீர்க்கிணறுகள் அமைந்துள்ள இடம்
(கன்னியாய், கல்லாறு, மன்னார்)

3. கோடை காலத்தில் மக்கள் அணியும் ஆடைகள்
(கம்பளி ஆடைகள், பருத்தி ஆடைகள், தோல் ஆடைகள்)

4. விண்ணூர்தி உயரஉயரப் பறந்து சென்றது. இதில் '**உயரஉயர**' என்பது
(அடுக்குத்தொடர், இரட்டைக்கிளவி, இணைமொழி)

5. யானை பிளிறும் அதுபோல கரடி
(கத்தும், ஊளையிடும், கர்ச்சிக்கும்)

6. அரசன் குடிமக்களைப் பாதுகாத்தான். இதில் அரசன்
(அஃறிணை ஒன்றன்பால், உயர்திணை ஆண்பால், உயர்திணை பலர்பால்)

7. ஒன்றுபட்டால் உண்டு
(தாழ்வு, வாழ்வு, சோர்வு)

8. மூதுரை, நல்வழி போன்ற நீதிநூல்களை இயற்றியவர்
(திருவள்ளுவர், பாரதியார், ஔவையார்)

9. இல்லம், மனை, அகம் என்பவற்றைக் குறிக்கும் ஒருசொல்
(நாடு, வீடு, காடு)

10. இடையனுக்கு இடைச்சி அதுபோல குறவனுக்கு
(குறவள், குறவி, குறத்தி)

11. வாய்மொழியாக வழங்கிவரும் பாடல்
(பரிபாடல், நாட்டார்பாடல், முல்லைப்பாட்டு)

12. விளிவேற்றுமை என அழைக்கப்பெறுவது
(5ஆம் வேற்றுமை, 8ஆம் வேற்றுமை, 1ஆம் வேற்றுமை)

13. கப்ஸ்பூர்கர் பேரரசின் தளபதி கெஸ்லருக்கு வரி கட்ட மறுத்தவர்
(சார்லஸ், ருடோல்ப், வில்கெம்ரெல்)

14. அறைகள் அறுநூறு அத்தனையும் ஒரேயளவு. அது
(தேன்கூடு, காக்கைக்கூடு, தூக்கணாங்குருவிக்கூடு)

15. பொதுத்தேர்வில் அதிகபுள்ளிகளைப் பெற்ற மாணவர்களை ஆசிரியர் பாராட்டினார். இதில் பெயரெச்சம்
(மாணவர், பெற்ற, பொது)

16. ஒரு பொருளின் பெயரைக் குறிக்கும் சொல்
(பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல்)

17. எனது அப்பாவின் தம்பி எனக்கு
(மாமா, சிற்றப்பா, பெரியப்பா)

18. புள்ளி மான்கள் அடர்ந்த காட்டில் துள்ளி ஓடின. இதில் வந்துள்ள பயனிலை அடைமொழி
(புள்ளி, அடர்ந்த, துள்ளி)

19. விளையாட்டு வீரர்களைப் பார்வையாளர்கள் தட்டிக்கொடுத்தனர். இதில் தட்டிக்கொடுத்தல் என்பது
(விலக்குதல், ஊக்கமளித்தல், ஏமாற்றுதல்)

20. புயற்காற்றினால் மரங்கள் சடசட என முறிந்தன. இதில் ஒலிக்குறிப்பை உணர்த்தும் சொல்
(என, சடசட, புயல்)

(20×1=20 புள்ளிகள்)

## 2. ஒத்தபொருட்சொல் எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| 1. ஆ | ________________ | 4. கானகம் | ________________ |
| 2. சேய் | ________________ | 5. நூல் | ________________ |
| 3. அழகு | ________________ | 6. உவகை | ________________ |

(6×1=6 புள்ளிகள்)

## 3. எதிர்ப்பொருட்சொல் எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| 1. நன்று | ________________ | 4. உண்மை | ________________ |
| 2. நினைவு | ________________ | 5. ஒளி | ________________ |
| 3. காய் | ________________ | 6. பெருமை | ________________ |



(6×1=6 புள்ளிகள்)

**4. சேர்த்தெழுதுக.**

1. பதநீர் + பானை = ______________________
2. நிலம் + நடுக்கம் = ______________________
3. தொழில் + பாடல் = ______________________
4. இனிமை + சொல் = ______________________
5. பத்து + இரண்டு = ______________________
6. மணி + ஒலி = ______________________
7. பூ + குயில் = ______________________
8. பொழிப்பு + உரை = ______________________

(8×1=8 புள்ளிகள்)

**5. பிரித்தெழுதுக.**

1. நீதிச்செய்யுள் = ________________ + ________________
2. பொருட்செறிவு = ________________ + ________________
3. நாட்டுப்புறம் = ________________ + ________________
4. மழலைமொழி = ________________ + ________________
5. கடற்கரை = ________________ + ________________
6. பொன்னிறம் = ________________ + ________________
7. வெள்ளப்பெருக்கு = ________________ + ________________
8. தலைப்பாகை = ________________ + ________________

(8×1=8 புள்ளிகள்)

**6. திருக்குறள்களை நிறைவு செய்க.**

| மலையும் | சுற்றத்தால் | ஆற்றின் |
|---|---|---|
| காடும் | மண்ணும் | இன்சொலும் |

1. மணிநீரும் ________________ ________________ அணிநிழற்

________________ உடையது அரண்.

2. கொடுத்தலும் ________________ ________________ அடுக்கிய

________________ சுற்றப் படும்.

(6×1=6 புள்ளிகள்)

**7. எடுத்துக்காட்டைப் பார்த்து தடித்த எழுத்திலுள்ள சொற்கள் ஏற்றுள்ள வேற்றுமை உருபையும், அது எத்தனையாம் வேற்றுமை என்பதையும் எழுதுக.**

| | உருபு | வேற்றுமை |
|---|---|---|
| எ+கா: **மைதிலி** பாடினாள். | இல்லை | 1 |
| 1. **அக்காவுக்குப்** பரிசு கொடுத்தேன். | ________ | ________ |
| 2. பாப்பாப்பாட்டு **பாரதியாரால்** இயற்றப்பெற்றது. | ________ | ________ |
| 3. தங்கை **நண்பியோடு** விளையாடினாள். | ________ | ________ |
| 4. **ஆடலில்** வல்லவள் மாதவி. | ________ | ________ |
| 5. நல்ல **நூல்களை** வாசிப்போம். | ________ | ________ |
| 6. மகாத்மாகாந்தி **இந்தியாவில்** பிறந்தார். | ________ | ________ |
| 7. **பூனையினது** கால்கள் பஞ்சு போன்றன. | ________ | ________ |
| 8. **தம்பீ!** இங்கே வா | ________ | ________ |

(16×½=8 புள்ளிகள்)

**8. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. ஈழத்தில் இயற்கைத் துறைமுகம் அமைந்துள்ள நகரம் எது? (1புள்ளி)

_______________________________________________

2. நீரினால் ஏற்படும் இயற்கை அழிவுகள் எவை? (1புள்ளி)

_______________________________________________

3. ஓரடிப் பாடல்களால் அமைந்த நீதிநூல்கள் எவை? (1புள்ளி)

_______________________________________________

4. முதலெழுத்துகள் எத்தனை? அவற்றை வகைப்படுத்துக. (2புள்ளிகள்)

_______________________________________________

_______________________________________________

5. வேற்றுமை என்றால் என்ன? அது எத்தனை வகைப்படும்? (2புள்ளிகள்)

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

6. இடைச்சொல் என்றால் என்ன? தத்தம் பொருளுணர்த்தும் இடைச்சொற்கள் எவை? (2புள்ளிகள்)

7. நாட்டார் பாடல்களில் மேலோங்கிக் காணப்படுவது எது? (1புள்ளி)

**9. கீழ்வருவனவற்றுள் ஒன்றினைப்பற்றி 75 சொற்களுக்குக் குறையாமல் எழுதுக.**

(8 புள்ளிகள்)

1. இயற்கை அழிவு
2. எனது தாய்மொழி
3. திருகோணமலை

## பகுதி – 2

**1. கீழ்க்காணும் உவமைத்தொடர்கள் குறிக்கும் பொருள்களை பொருத்தமாக இணைக்குக.**

| | |
|---|---|
| 1. கண்ணை இமைகாப்பது போல • | • செய்தி எங்கும் பரவுதல் |
| 2. கல்மேல் எழுத்துப் போல • | • மிக்க மகிழ்ச்சி |
| 3. காட்டுத் தீ போல • | • பாதுகாத்தல் |
| 4. தாயைக் கண்ட சேயைப் போல • | • எல்லோருக்கும் பயன்படுதல் |
| 5. குன்றின் மேலேற்றிய தீபம் போல • | • அழியாது இருத்தல் |

(5×1=5 புள்ளிகள்)

**2. கீழே தரப்பட்ட உரைப்பகுதியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

பண்டைக் காலத்தில் பெண்கள், ஆண்கள், குழந்தைகள், முதியவர்கள் என எல்லோரும் கூடி வாழ்ந்தபோது பெண்ணே தலைவியாக இருந்தாள். இதனைத் தாய்வழிச் சமூகம் என்று அழைத்தனர். பண்டைய மக்கள் காய், கனி, கிழங்குகளைச் சேகரித்தும் சிறுவிலங்குகள், பறவைகளை வேட்டையாடியும் உண்டு வாழ்ந்தனர். பின் வேட்டையாடுவதைத் தொழிலாக்கி வேறு இடங்குகளுக்குச் சென்றனர். முதியவர்கள் வேட்டைக்கான கருவிகளைத் தயாரித்தனர். இளைஞர்கள், இளம்பெண்கள் வேட்டையாடினர். குழந்தைகள், சிறுவர்கள் காய்கனிகளைச் சேகரித்தனர். முதியபெண்கள் வீட்டுவேலைகளைப் பொறுப்பேற்று குடும்பத்தலைவியாக இருந்தனர்.



1. பெண்களைத் தலைவியாகக் கொண்ட சமூகத்தை எவ்வாறு அழைத்தனர்?

______________________________

2. பண்டைய மக்கள் எவற்றை உணவாகக் கொண்டனர்?

______________________________

3. அக்காலத்தில் வீட்டுவேலைகளைப் பொறுப்பேற்றவர்கள் யாவர்?

______________________________

4. குழந்தைகளும் சிறுவர்களும் எவற்றைச் சேகரித்தனர்?

______________________________

5. வேட்டைக்கருவிகளைத் தயாரித்தவர் யார்?

______________________________

(5×1=5 புள்ளிகள்)

**3. அடைப்புக்குறிக்குள் உள்ள சொற்களுள் பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்து கீறிட்ட இடங்களை நிரப்புக.**

கல்பனா சௌலா என்பவர் விண்வெளிப்பயணத்தில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டவர். அவர் இசையின் மீதும் அதிக நாட்டம் கொண்டவர். நீரோடையில் மேலெழுந்து துள்ளிக் குதிக்கும் அலைகளின் ______________ (ஓசையில், ஓசை) கேட்டு இன்புறுவார். ______________ (கருகிய, வண்ண) மலர்களைச் சுற்றிவரும் வண்டுகளின் இசையில் மகிழ்வார். ______________ (இயற்கை, செயற்கை) அழகை இரசிப்பார். ______________ (வெள்ளை, பச்சைப்) புல்வெளியில் விழும் வெண்பனியைக் கண்டு மகிழும் பறவைகளின் ______________ (ஒளி, ஒலி) கேட்டு மகிழ்பவராகவும் வாழ்ந்தார். விஞ்ஞானிகளின் நாவிலிருந்து வரும் ஒவ்வொரு வார்த்தையையும் தனது அறிவுக்கிடங்கினில் சேகரித்து வைத்துக் கொள்வார். இந்தப் பண்பே கல்பனாவை விண்வெளிக்கப்பலில் பயணம் செய்யும் அளவுக்கு உயர்த்தியது.

(5×1=5 புள்ளிகள்)

**4. கீழ்க்காணும் வாக்கியங்களை உமக்குத் தெரிந்த மொழியில் வாசித்து தமிழில் மொழிபெயர்த்து எழுதுக.**

Deutsch:
1. Wir atmen saubere Luft.
2. Kokila ging in traditioneller Kleidung in den Tempel.
3. Der König kämpfte im Krieg mit seinen Feinden.
4. Wir werden die tamilische Sprache lernen und unser Wissen erweitern.
5. Naavarasan gewann in der Leichtathletik.

French:
1. Nous respirons de l'air pur.
2. Kokila est allée au temple en portant des vêtements traditionnels.
3. Le roi a combattu ses ennemis.
4. Nous développons notre intelligence en apprenant la langue maternelle.
5. Naavarasan a remporté la course à pied.

Italy :
1. Noi respiriamo aria pulita.
2. Kokila andò al tempio indossando abiti tradizionali.
3. Il re ha combattuto contro i suoi nemici.
4. Noi imparando la lingua madre sviluppiamo la nostra intelligenza.
5. Naavarasan ha vinto alla gara di corsa.

**தமிழ்:**

1. ______________________________

2. ______________________________

3. ______________________________

4. ______________________________

5. ______________________________

(5×1=5 புள்ளிகள்)

| பணியகப் பயன்பாட்டிற்கு: | | | |
|---|---|---|---|
| விடைத்தாள் மதிப்பீடு | முழுப்பெயர் | கையொப்பம் | மொத்தப்புள்ளிகள் |
| முதலாம் முறை | | | |
| இரண்டாம் முறை | | | |
| இறுதிப்புள்ளிகள் | | | |